சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–8வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதாசிவம் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | நாராயணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் கடந்த 20 வருடங்களாக அரசு மருத்துவராக சென்னை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் பணிபுரிந்து தற்போது விருப்ப ஓய்வு கொடுத்து விட்டேன். தற்போது ஈரோடு பெருந்துறைரோட்டில் அமைந்துள்ள மாருதி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனையை நானும், என்னுடைய மனைவி மருத்துவர் ஆகிய இருவரும் கடந்த 20 வருடங்களாக நடத்தி வருகிறோம். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் என்னுடைய உறவினர்கள் ஆவார்கள். மேற்கண்ட எதிரிகளின் மகளான மஞ்சுவை எனக்கு தெரியும்.

2. இறந்து போன அருண்ராம் என் தந்தைவழி மற்றும் தாய்வழி சகோதரர் ஆவார். என்னுடைய குடும்பத்தில் நான் தான் முதன்முறையாக மருத்துவம் படித்து மருத்துவர் ஆனேன். இறந்து போன அருண்ராம் மற்றும் அவருடைய மூத்த சகோதரி கோமதி ஆகிய இருவருக்கும் மருத்துவ படிப்பு படிப்பதற்காக என்னுடைய உந்துதல் மற்றும் அறிவுரை அவர்களுக்கு பள்ளிபடிக்கும் காலத்திலே சொல்லியுள்ளேன்.

3. மேற்படி இறந்து போன அருண்ராம் மற்றும் அவருடைய மூத்த சகோதரிக்கு மருத்துவ தொடர்பான அனைத்து அறிவுரைகளையும் நான் தான் எப்போதும் வழங்கி சொல்லுவேன். 17.06.2014ம் தேதி அன்று அருண்ராம் தற்கொலை செய்து கொண்டார். அவர் தற்கொலை செய்து

கொள்வதற்கு 4 நாட்களுக்கு முன்பு காலையில் 7 மணி அளவில் நான் என் வீட்டில் இருந்தபோது என் மனைவியுடன் காபி குடித்துக் கொண்டிருந்தபோது எனக்கு 3ம் எதிரியான மஞ்சுவிடம் இருந்து என்னுடைய அலைபேசிக்கு அழைப்பு வந்தது. நான் என்னுடைய அலைபேசியை எடுத்து பேசும் போது யார் என்று என்னால் அங்கீகரிக்க முடியவில்லை காரணம் மஞ்சுவின் நம்பர் எனக்கு தெரியாத காரணத்தினால் அவர் யார் என்று என்னால் அறிய முடியவில்லை தொடர்ந்து மஞ்சு என்னை மாமா என்று கூறி அதன் பின்பு உறவுமுறை கூறியதின் அடிப்படையில் மஞ்சு யார் என்று என்னால் அறிய முடிந்தது.
4. என் மனைவி என்னுடன் இருந்ததால் என்னுடைய அலைபேசியை ஸ்பீக்கர் மூலம் போட்டு பேசினேன். அப்போது மஞ்சு தானும் என்னுடைய தம்பியான இறந்து போன அருண்ராமும் கடந்த 8 வருடங்களாக காதலித்து வருகிறோம். மேலும் மஞ்சு என்னிடம் தன்னுடைய வீட்டில் எங்களது காதலை ஏற்று கொள்ளவில்லை. எனவே வேறு இடத்தில் திருமணம் உறுதி செய்யப்பட்டது. அதனால் என்னுடைய தம்பியான இறந்து போன அருண்ராமை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று என்னிடம் கூறினார்.
5. நான் அதற்கு உடனே அருண்ராமல் எந்த வித தொந்தரவும் இருக்காது. நான் பார்த்து கொள்கிறேன் என்று மஞ்விடம் கூறினேன். மறுநாள் காலை 7 மணி அளவில் மஞ்சுவின் தாயாரான 2ம் எதிரியிடம் இருந்து என்னுடைய அலைபேசி மூலம் அழைப்பு வந்தது. மேலும் 2ம் எதிரி என்னிடம் அலைபேசியில் என் மகளுக்கு 18.06.2014 அன்று சென்னிமலை செங்குந்தர் திருமண மண்டபத்தில் திருமணம் நடக்க உள்ளதால் என்னை தம்பியான அருண்ராமிடம் இருந்து எவ்வித தொந்தரவுகளும் வராமல் பார்த்துகொள்ளுமாறு என்னிடம் கூறினார்.
6. மேலும் 2ம் எதிரி என்னிடம் என்னுடைய பெண்ணாக இருந்தால் எப்படி பார்த்து கொள்விற்களோ, அவ்வாறே திருமணம் நல்ல முறையில் நடப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறினார். அதே நேரத்தில் 2ம் எதிரியின் கணவர், 1ம் எதிரி அலைபேசியை பிடிங்கி அருண்ராமால் நடக்க இருக்கும் திருமணத்திற்கு ஏதாவது பிரச்சனை வந்தால் என்னுடைய தம்பியை நான் மறந்துவிட வேண்டியதான். எங்களுக்கும் ஈரோட்டில் தகுந்த ஆட்கள் இருக்கிறார்கள் என்று மிரட்டலான தொணியில் என்னிடம் பேசினார்.
7. உடனே என்னுடைய சித்தப்பாவான அ.சா.1 வாசுதேவனிடம் அலைபேசிமூலம் மேற்கண்ட சங்கதிகளை தெரிவித்தேன். அதன்பின்பு என் தம்பியான அருண்ராம் அலைபேசிக்கு அழைத்து மேற்கண்ட சங்கதிகளை கூறி அறிவுத்தினேன். தொடர்ச்சியாக அருண்ராம்

தன்னுடைய அலைபேசியில் கதறி அழுது கொண்டு 1 மற்றும் 2 எதிரிகள் சொன்னமாறி இல்லை. எதிரிகளின் மகளான மஞ்சுதான் என்னை கூப்பிட்டு கொண்டிருக்கிறார். வேனுமானால் outgoing, incoming call history யை எடுத்து எனக்கு அனுப்புவதாக அருண்ராம் என்னிடம் கூறினார்.

8. மேலும் அருண்ராம் மேற்கண்ட விவரங்களை சொல்லியதால் அவர் மனம் உடைந்த நிலையில் இருந்ததாலும், அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி பார்த்து கொள்ளலாம் என்று அறிவுறித்தினேன். அதன்பிறகு 15.06.2014 அன்று அருண்ராம் தன்னுடைய பொற்றோர்கள் அறிவுறுத்தலின் பெயரில் சென்னையில் இருந்து ஈரோட்டிற்கு வந்துவிட்டார்.

9. மேற்கண்ட தேதியில் மாலை 6.30 மணி அளவில் அருண்ராம் என்னை என்னுடைய மருத்துவமனையில் சந்திக்க வந்தார். அருண்ராம் கசங்கிய உடையுடன் மனம் சோர்ந்த நிலையில் என்னை பார்க்க வந்தார். மேலும் அவர் என் முன்பு உட்காராமல் தலைகுனிந்து கொண்டே அரை மணி நேரம் நின்று கொண்டிருந்தார். நான் உடனே அருண்ராமிடம் மஞ்சுவிற்கு திருமணம் நடக்கபோவதால் அது சம்மந்தமாக எவ்வித பிரச்சனையும் வேண்டாம் என்று அறிவுறித்தினேன். அப்போது அவர் கதறி அழுது கொண்டு கடந்த 8 வருடங்களாக மஞ்சுவை தன்னுடைய மனைவியாக நினைத்து வாழ்ந்து வருகிறேன். மஞ்சுவும், அவருடைய குடும்பத்தாரும் என் தம்பியான அருண்ராமை ஏமாற்றிவிட்டதாக என்னிடம் கூறினார்.

10. மேலும் அருண்ராம் என்னிடம் தன்னுடைய அலைபேசியில் உள்ள outgoing மற்றும் incoming அழைப்புகளை காட்டினார். நான் அவருடைய அலைபேசி மேற்கண்ட அழைப்புகளை பார்த்தேன். அதன்பின்பு அருண்ராமை சமாதானம் செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய அலைபேசி மூலம் என் சித்தபாவை அழைத்து அவரிடமும் என் சித்தியிடமும் அருண்ராம் மனச் சோர்வுடன், மிகவும் மனம் உடைந்து உள்ளார். அவரை நல்லபடியாக பார்த்துக்கொள்ளும்படி அவர்களிடம் நான் அறிவுறித்தினேன்.

12. அதன்பிறகு 17.06.2014 அன்று அருண்ராம் தற்கொலை செய்து கொண்டார். நான் மேற்கண்ட தகவலை அறிந்தவுடன் ஈரோடு தலைமை மருத்துவமனைக்கு விரைந்து சென்றேன். அங்கு நான் போகுவதற்கு முன்பே அருண்ராம் இறந்துவிட்டார் என்று உறுதி செய்யப்பட்டு. சவகிடங்கிற்கு அருண்ராம் பிரேதத்தை அனுப்பி வைத்தார்கள் என்று தெரிந்துகொண்டேன். அதன்பிறகு 28.06.2014 அன்று என்னுடைய

சித்தப்பவான வாசுதேவன் தன்னுடைய அலைபேசியில் இருந்து என்னை அழைத்து அருண்ராம் தற்கொலை கடிதம் எழுதி வைத்துள்ளார் அதை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக என்னிடம் கூறினார். 30.06.2014 அன்று இவ்வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.